[3rd March 1969

விவகாரம் விசாரிக்கப்படவில்லை. அந்த கான்ஸ்டேபிள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கேள்வி கேட்டபிறகு என்னிடம் வந்து கேட்டார்கள், 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள், பாவம் அந்த ஆளின் குடும்பம் கெட்டுப்போகும், நடவடிக்கை எடுக்கலாமா' என்றார்கள். நான் அவர்களிடம் 'உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டேன். அப்படிச் சட்ட மன்றத்தில் கேட்ட பிறகுதான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மற்ற நேரங்களில் இல்லை. ஆகையால் திட்டவட்டமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்களின் கற்புக்குப் பாதகம் இல்லாமல் ஏற்கனவே முதலமைச்சர் சொன்னமாதிரி நல்லவகையில் பாதுகாப்புத் தர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதிகாரிகள் சிலர் தவறாக நடக்கிறவர்கள் இருப்பார்கள். எந்த சர்க்காரிலும், எப்போதும் அது தவிர்க்க முடியாத குறையாகும். உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்ட இடத்தைப் பொறுத்தவரையில், அந்தக் காலக் கட்டத்தில், அந்தப் புகாரைத் தெரிந்தவுடனே அரசுக்கு எழுதி அனுப்பி, அது கேட்கப்படாமல் இருந்தால்தான் குறையாகக் கருத முடியுமே தவிர வேறல்ல.

Police Firing

* 93 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of times firing was resorted to in Tamil Nadu from 6th March 1967 to 31st March 1968;

(*b*) the number of rounds fired; and

(*c*) the number of persons injured?

துப்பாக்கிப் பிரயோகம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 6—3—1967 முதல் 31—3—1968 வரை தமிழ்நாட்டில் எத்தனை முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது?

(இ) எத்தனை ரவுண்டுகள் சுடப்பட்டன?

(உ) எத்தனை பேர் காயமடைந்தனர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 9 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

(இ) 52 சுற்றுகள் சுடப்பட்டன.

(உ) 19 பேர் காயமடைந்தனர்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற விவரம் இல்லை. ஏற்கனவே பழைய முதலமைச்சர் அவர்கள் இனிமேல் இத்தகைய

துப்பாக்கிச் சூடுகள் நடைபெறும்போது உயிர்ச் சேதமில்லாமல் ஜாக்கிரதையாக செய்யப்படும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசு அதை அனுசரிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியில் எத்தனை பேர் காயம் அடைந்தார்கள் என்று கேட்கப்பட்டிருக்கிறது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை 7. கூடுமானவரையில் துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்கப்படவும், நடைபெறுகின்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சாவு தவிர்க்கப்படவும் இந்த அரசு தன்னால் ஆன எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் எந்தக் காரணத்தால் எத்தகைய சூழ்நிலையில் ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த 9 துப்பாக்கிப் பிரயோகங்களில் ஒன்று மதுவிலக்கு வழக்கில் ஒருவரைப் பிடிக்கப் போனபோது அந்த ஊரார் போலீசாரை வளைத்துக் கொண்டு துரத்தினார்கள். அதனால் ஏற்பட்டது. இன்னொரு இடத்தில் மது, வெளி நாட்டுக்கு கள்ளக் கடத்தலாகச் செல்வதை தடுப்பதற்காகப் போலீசார் போகும்போது துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாததாகி விட்டது. இன்னொன்று, திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றவாளிகளைக் கைது செய்து வரும்போது போலீசாரிடமிருந்து குற்றவாளிகளை விடுவிக்க முயற்சி நடந்தபோது, துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாததாகி விட்டது. அரிசி கடத்தலைத் தடுப்பதற்குப் போலீசார் போன போது, அந்த இடத்தில் போலீசாரைத் திருப்பி தாக்கியபோது, துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டது. பஸ் தொழிலாளர்கள்—மாணவர்கள் போராட்டத்தில், தொழிலாளர்கள் போராட்டத்தில், தஞ்சையில் விவசாயக் கூலிகளுக்கும் மிராசுதாரர்களுக்கும் நடந்த போராட்டத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

திரு. வி. தங்கபாண்டியன் : 1964–65, 1965--66-ல் எத்தனை இடங்களில் எத்தனை துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது? அப்போது ஆளும் கட்சியாக எது இருந்தது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த ஆண்டுகளில் எது ஆளும் கட்சி என்பது அங்கத்தினருக்கே தெரியும். 1964-ல் 7 துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. 1965-ல், 46 இடங்களிலும், 1966-ல் 5 இடங்களிலும் நடைபெற்றது.

திரு. எம். எத்திராஜுலு : துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்னதாக முதலில் லத்தி சார்ஜ், இரண்டாவது கண்ணீர்ப் புகை, மூன்றாவதாக 'சுடப்போகிறோம்' என்ற எச்சரிக்கை, என்ற மூன்றையும் செய்யவேண்டுமென்றிருக்கிறது. இந்த 9 இடங்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களில் அவை கையாளப்பட்டனவா?

[3rd March 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூடுமானவரையில் அனுசரிக்கப்பட்டது என்று தெரிகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தக் குறிப்புகளில் தொழிலாளர்கள் போராட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் போராட்டம் திராவிட முன்னேற்றக் கழகம், ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.என்., போன்றவைகள் நடத்துகின்றன. நேற்றுகூட உணவு தான்யக் கிடங்கு தொழிலாளர் பெரிய வேலை நிறுத்தம் நடத்தினார்கள். சுமுகமாக முடிந்தது. துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடங்களில் இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் தலைமை தாங்கி, தவறான பாதையில் நடத்திச் சென்றதால்தான், நடைபெற்றது என்று சொல்வது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகளுக்கெல்லாம் விசாரணை நடைபெறுகிறது. விசாரணையின் முடிவில்தான் தெரியும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : பஸ் தொழிலாளர்கள்—மாணவர்கள் தகராறில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. அதில் மாணவர்கள் எத்தனை பேர்கள் காயமடைந்தார்கள், பஸ் தொழிலாளர்கள் போராட்டத்தில் சுட்டதில் எத்தனை பேர் காயமடைந்தார்கள், சுடப்பட்டனர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேருக்குக் காயம் ஏற்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : கடந்த இரண்டு ஆண்டுகளைவிட 1963-64, 1964-65, 1965-66-ல் அதிகமான துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாக அறிக்கையிலிருந்து தெரிகிறது. அவற்றில் எவ்வளவு பேர்கள் இறந்தார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1964-ல் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் காயமடைந்தார்கள். இரண்டு பேர் இறந்தார்கள். 1965-ல் 339 பேர் காயடைந்தார்கள். 55 பேர்கள் இறந்தார்கள். 1966-ல் மூன்று பேர்கள் இறந்தார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில், தீ அணைப்பு இயந்திரங்களைப் பொருத்தி, நீர்ப் பீச்சுவதன் மூலம் கூட்டத்தைக் கலைக்கவேண்டுமென்று சட்டம் செய்திருப்பது தெரியுமா? அப்படியானால் அதை உபயோகிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி எதுவும் விவரமில்லை.

3rd March 1969]

திரு. எஸ். ராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஹார்பர் சேலம் போன்ற சிறைச்சாலைகளில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் எச்சரிக்கை இல்லாமலே சுட்டுக் கொன்றது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரசுக்கு மாத்திரம் அல்ல அகில உலகத்திற்கும் தெரியும்.

THIRU A. R. DAMODARAN : In reply to a supplementary question of my friend, Thiru M. Ethirajulu, the Hon. the Chief Minister said that precautionary measures of giving warning, lathi-charge, tear-gas, etc., were taken by the Government before ordering firing. Am I to understand that even in chasing dacoits and catching prohibition offenders, this procedure is followed?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகள் எல்லாம் இந்த சந்தர்ப்பங்களில் கடைப்பிடிக்க இயலாதவை.

Cars purchased for the use of Ministers

* 94 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether new cars were purchased for the nine Ministers of the Government of Tamil Nadu;

(*b*) the purpose for which the old cars are utilised;

(*c*) whether any of the old cars were sold; and

(*d*) if so, the persons to whom and the price for which they were sold?

அமைச்சர்களின் பயனுக்காக வாங்கப்பட்ட கார்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அமைச்சர்கள் 9 பேருக்கு புதுக் கார் வாங்கப்பட்டதா?

(இ) பழைய கார்கள் என்ன உபயோகத்திலிருக்கிறது?

(உ) பழைய கார்கள் ஏதேனும் விற்கப்பட்டதா?

(எ) அப்படியென்றால் யாருக்கு, என்ன விலைக்கு விற்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். அமைச்சர்களின் பயனுக்காக ஒன்பது புதிய அம்பாஸிடர் கார்கள் அரசாங்கத்தால் வாங்கப்பட்டன.

(இ) முன்னாள் அமைச்சர்களால் பயன்படுத்தப்பட்ட எட்டுக் கார்களில் ஐந்து கார்கள் இத்துறையிலுள்ள துறை வண்டிகள் தொகுப்பிலே (staff car pool) சேர்க்கப்பட்டுள்ளன.